THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Monday, the 10th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Refusal to hold public meeting at Aravancadu

*156 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether licence was refused for a public meeting in April 1968 in Aravancadu, Nilgiris, to be addressed by Thiru Kamaraj; **and**

(*b*) if so, the reason therefor ?

அரவங்காட்டில் பொதுக்கூட்டம் நடத்த தடை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி, அரவங்காட்டில் திரு. காமராஜ் அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேச 1968 எப்ரலில் அனுமதி மறுக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இலாகாவினர் தந்த திருத்தப்பட்ட பதிலை தங்கள் அனுமதியோடு படிக்கிறேன்—

16—4—1968-ல் திரு. காமராஜ் அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்குச் சென்றார். 16—4—1968 முதல் 21—4—1968 வரையுள்ள இடைக்காலத்தில், உதகமண்டலம், குன்னூர், கோதகிரி, மஞ்சூர், கூடலூர் மற்றும் கிரெய்க்மூர் ஆகிய இடங்களில் 8 பொதுக் கூட்டங்களில் பேசினார். எல்லாப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கும் ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கும் உரிமங்கள் வழங்கப்பட்டன. 17—4—1968 அன்று முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர், திருமதி அக்கம்மாதேவி, மாலை 4-30 மணிக்கு உதகமண்டலம் குன்னூர் நெடுஞ்சாலையில் வெடி மருந்துத் தொழிற்சாலைக்கு முன்பாக ஒரு பொதுக்கூட்டத்திற்காக ஒலிபெருக்கி அமைக்க அன்றைய தேதியில் உரிமம் வழங்க ஒப்பளிப்பு கோரி மனு செய்தார். இதுவரை பொதுக்கூட்டம் எதுவும் அந்த இடத்தில் நடைபெற்றதில்லை. குன்னூர் காவல்துறை மேற்பார்வையாளரால் அந்த நெடுஞ்சாலை பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கும் சட்டம், ஒழுங்கு, மற்றும் போக்குவரத்துக்கு இடர்ப்பாடாக உள்ளதன் காரணமாக அம்மனுவைப் பரிந்துரைக்கவில்லை.

[10th March 1969

திரு. என். ஆர். தியாகராஜன்: சம்பந்தப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர் தலைவர் காமராஜ் அவர்களை அணுகி இங்கே பொதுக்கூட்டம் நடத்துவது வழக்கம் இல்லை என்றோ அல்லது அங்குள்ள நிலையை விளக்கியோ கூறினாரா? இனிமேலாவது இது போன்ற சந்தர்ப்பங்களில் அப்படி நடைபெறாமல் தவிர்க்கப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூட்டத்தில் சொற்பொழி வாற்ற இருந்தவர் தலைவர் காமராஜ் அவர்கள். அனுமதி கேட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி அக்கம்மாதேவி. யார் அனுமதி கேட்டார்களோ, அவர்களிடத்தில் அந்த இடம் கூட்டம் நடத்துவதற்கு சரியான இடமல்ல என்று கூறப்பட்டது. வழக்கமாக அந்த நெடுஞ்சாலைக்கு ஒரு பர்லாங்குக்கு அப்பால் எப்போதும் கூட்டம் நடக்குமிடமான ஜகதாலா திடல் என்னுமிடத்தில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு ஒப்புதல் அளித்தார்கள்.

Municipal Council, Virudhunagar.

* 157 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Communists caused chaos in the Municipal Council, Virudhunagar, recently;

(*b*) the loss of property due to this; and

(*c*) the action taken thereon by the Government ?

விருதுநகர் நகர சபை.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அண்மையில் விருதுநகர் நகர சபையில் கம்யூனிஸ்டுகள் கலகம் விளைவித்தனரா?

(இ) ஆமெனில், சொத்து சேதம் எவ்வளவு?

(உ) இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 31—5—1968-ல் விருதுநகர் நகரசபையில் தொழிலாளர்களை வேலையினின்றும் நீக்குவது பற்றிய நிகழ்ச்சி குறித்து குழுமி யிருந்த தொழிலாளர்களிடையேயும், நகராட்சி உறுப்பினர் களிடையேயும் பிளவு ஏற்பட்டு வாய்ச் சண்டையிட்டுக் கொண் டார்களேயன்றி வேறு கலகம் நடைபெறவில்லை. சிலர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்ததால் கண்ணாடி சன்னலின் ஒரு பகுதியும் மரக்கதவின் ஒரு பகுதியும் சேதமடைந்தன. இதில் வெளியார் யாரும் ஈடுபடவில்லை. சேதத்தின் மதிப்பு ரூ. 8. வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை.